தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 116 | 4 Pages | 24.11.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 18254
மலர்: 02 | இதழ்: 116 | 4 பக்கங்கள் | 24.11.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்**
**கொல்லாமை சூழும் நெறி**

**விளக்கம்:**
**நல்ல வழி என்று அறநூல்களால் சொல்லப்படுவதுஎதுஎன்றால்,எந்தஉயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.**

## 5 நாட்கள் சுற்றுப்பயணத்தில் உலக தலைவர்களுடன் 31 பேச்சுவார்த்தைகள் நடத்திய பிரதமர் நரேந்திர மோடி

புதுடெல்லி, நவ.24

பிரதமர் மோடி 3 நாடுகளுக்கான தனது அரசு முறை சுற்றுப்பயணத்தின் முதற்கட்டமாக நைஜீரியா சென்று, அந்நாட்டு அதிபரை சந்தித்தார். நைஜீரியா பயணத்தை முடித்துக் கொண்டு பிரேசில் சென்ற அவர், அங்கு நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டில் கலந்து கொண்டார். அதனை தொடர்ந்து கயனா நாட்டிற்கு சென்ற பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் உயரிய தேசிய விருதான 'தி ஆர்டர் ஆப் எக்சலன்ஸ்' (The Order of Excellence) விருது வழங்கப்பட்டது.

தனது 5 நாட்கள் சுற்றுப்பயணத்தின்போது பல்வேறு உலக நாடுகளின் தலைவர்களை சந்தித்து பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். குறிப்பாகஜி20மாநாட்டையொட்டிபிரேசிலில்நடைபெற்ற10இருதரப்பு பேச்சுவார்த்தைகள், அதனை தொடர்ந்து கயானாவில் நடைபெற்ற 9 இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆகியவற்றில் மோடி பங்கேற்றார்.

இதன்படி பிரேசிலில் இந்தோனேசியா, போர்ச்சுகல், இத்தாலி, நார்வே, பிரான்ஸ், இங்கிலாந்து, சிலி, அர்ஜெண்டினா மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்டநாடுகளின்தலைவர்களைபிரதமர்மோடிசந்தித்துபேசியுள்ளார். அதேபோல் கயானாவில், டோமினிகா, பகாமாஸ், திரினிடாட் & டோபாகோ, சுரிநாம், பார்படாஸ், அன்டிகுவா & பார்புடா, கிரெனெடா மற்றும் செயிண்ட் லூசியா ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். இது தவிர, முறைசாரா சந்திப்புகள் வாயிலாக சிங்கப்பூர், தென் கொரியா, எகிப்து, அமெரிக்கா, ஸ்பெயின் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிரதமர் மோடி, ஐரோப்பிய ஒன்றியம், உலக வர்த்தக மையம், உலக சுகாதார மையம், ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றின் தலைவர்களையும் சந்தித்து பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வட இந்தியாவில் ஏற்பட்டுள்ள காற்று மாசுபாடு பிரச்சினை தேசிய அவசர நிலை: ராகுல் காந்தி



புதுடெல்லி, நவ.24

வட இந்தியாவில் ஏற்பட்டுள்ள காற்று மாசுபாடு ஒரு "தேசிய அவசரநிலை" என்று வலியுறுத்தியுள்ள மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, வரும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் சக எம்.பி.க்கள் ஒன்று கூடி இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ்தளத்தில் ஒரு வீடியோவுடன்கூடிய பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் பதிவில் அவர் கூறியிருப்பதாவது, "வட இந்தியாவில் ஏற்பட்டுள்ள காற்று மாசுபாடு பிரச்சினை தேசிய அவசர நிலையாகும். குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் காற்று மாசுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதால் பொது சுகாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார பேரழிவானது எண்ணற்ற உயிர்களை அழிக்கிறது. நம்மை சுற்றியுள்ள ஏழைகள் அனைவரும், அவர்களைச் சூழ்ந்துள்ள நச்சுக்காற்றில் இருந்து வெளிவர முடியாமல் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

சுத்தமான காற்றுக்காக குடும்பங்கள் தவிக்கின்றன, குழந்தைகள் நோய்வாய்ப்படுகிறார்கள், கோடி கணக்காண உயிரினங்கள் அழிந்து வருகின்றன. சுற்றுலாத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினையால் நமது நாட்டுக்கான உலகளாவிய நற்பெயர் சிதைந்துள்ளது.

நூறு கிலோமீட்டருக்கு காற்று மாசு பரவியுள்ளது. காற்று மாசை சுத்தம் செய்வதற்கு முக்கிய மாற்றங்கள் மற்றும் உறுதியான நடவடிக்கைகள் அரசாங்கம், நிறுவனங்கள், நிபுணர்கள் மற்றும் குடிமக்களிடமிருந்து தேவைப்படுகிறது. இந்த சமயத்தில் நாம் ஒன்றிணைந்து கடமையாற்ற வேண்டும்.இதைஅரசியல்பழிசுமத்தும்விளையாட்டாகபார்க்கக்கூடாது. இன்னும் சில நாட்களில் நாடாளுமன்றம் கூடுகிறது. நமக்கு ஏற்பட்டுள்ள கண் எரிச்சல், தொண்டை வலி பிரச்சினைகள் குறித்து எம்.பி.க்களுக்கு நினைவூட்டப்படும். காற்று மாசு பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து நாடாளுமன்றத்தில் அனைவருக்காகவும் ஆலோசிக்க வேண்டும்" இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் வரும் 25ம் தேதி தொடங்கி டிசம்பர் 20ம் தேதி வரை நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிறந்தநாளில் சோகம்: துப்பாக்கி குண்டு பாய்ந்து; இந்திய மாணவர் பலி



வாஷிங்டன், நவ.24

அமெரிக்காவில் உள்ள அட்லாண்டாவில் பயின்றுவந்த இந்திய மாணவரான ஆர்யன் ரெட்டி (23 வயது), அவரது பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது, அவர் வைத்திருந்த துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் குண்டுபாய்ந்து பரிதாபமாக உயிரிழந்தார். கன்சாஸ் மாநில பல்கலைக்கழகத்தில் பயின்றுவந்த முதுகலை மாணவரான ஆர்யன், சமீபத்தில் அவர் வாங்கிய துப்பாக்கியை சுத்தம் செய்யும்போது,துப்பாக்கிதற்செயலாகசுட்டதில் இளைஞர் சம்பவ இடத்திலேயே பலியானதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கியால் சுடும் சப்தம் கேட்டதும், ஆர்யன் அறைக்கு வந்த அவரது நண்பர்கள், ரத்த வெள்ளத்தில் கிடந்த அவரைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக, ஆர்யனை அருகில் உள்ள மருத்துவனையில் சேர்த்தனர். ஆனால் ஆர்யன் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

ஆர்யன் ரெட்டியின் குடும்பத்தினர் தெலுங்கானா மாநிலம் புவனகிரி மாவட்டத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள். அவர்கள் தற்போது உப்பல் மாவட்டத்தில் வசித்து வருகின்றனர். ஆர்யன் உயிரிழந்தது குறித்து அவரது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று பெற்றோரை பார்க்க வருவதாக ஆர்யன் கூறியிருந்தார். மகனை பார்க்க போகும் மகிழ்ச்சியில் இருந்த பெற்றோரிடம், அவரது உடல் ஒப்படைக்கப்பட உள்ளது சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# காஞ்சிபுரத்தில் துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையம்: முதல்வர் திறந்து வைத்தார்

காஞ்சிபுரம், நவ.24

தென்னிந்தியாவில் முதன்முறையாக காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று (22.11.2024) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முழுவதும் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தால் முதற்கட்டமாக 18.18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை திறந்து வைத்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் புரிபவர்கள் சர்வதேச தொழில் சந்தையில் போட்டியிட அவர்களின் உற்பத்தி திறன் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும், வளர்ந்து வரும் தொழில் பிரிவிற்குள் நுழைய வழி வகை செய்யவும், தமிழ்நாட்டில் 5 இடங்களில் சுமார் 100 கோடி ரூபாயில் மெகா கிளஸ்டர் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தானியங்கி வாகனங்கள், இயந்திரங்கள், மின் மற்றும் மின்னணு உபகரணங்களில் பயன்படுத்தப்படும் துல்லிய பொறியியல் பாகங்களை உருவாக்கும் மையமாக (Hub) கருதப்படும் சென்னை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் தொழில் முனைவோர் கூட்டமைப்பினருடன் இணைந்து 47.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 33.33 கோடி ரூபாய் அரசு மானியத்துடன் துல்லிய உற்பத்தி பெருங்குழுமம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டது.




இப்பெருங்குழும திட்டத்தின் முதல் பகுதியாக 18.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13.33 கோடி ரூபாய் மானியத்துடன்வடிவமைப்பு மையம் (Engineering Design Centre), மறு பொறியியல் பரிசோதனைக் கூடம் (ReEngineeringLab), சேர்க்கைஉற்பத்தி மையம் (Additive Manufacturing Centre), மேம்பட்ட பயிற்சி மையம், காப்புரிமை (Patent) பதிவு வசதி மையம், நவீன பரிசோதனை மையம் (Testing Lab) போன்றவை நிறுவப்பட்டுள்ளன.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள 14க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழிற்பேட்டை சங்கத்தினரால் இணைந்து உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கு ஊர்தி (Special Purpose Vehicle) மூலம்

அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் பொது வசதிகளை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்,

ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், இளம் தலைமுறை பொறியாளர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பயன்படுத்தி பயன் பெறலாம்.

தமிழ்நாடு முழுவதும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்படுத்தி கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் பொதுவசதிகளை சென்னைமாவட்டத்தில்25,000க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களும், திருமுடிவாக்கம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 1,000 தொழில் நிறுவனங்களும் பயன்படுத்தி கொள்ளலாம்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் புதிய கண்டுபிடிப்புகளுக்கு பெரிய நிறுவனங்களை சார்ந்து இருக்காமல், இத்திட்டத்தின் உயர் மென்பொருளை (Advanced Software) பயன்படுத்தி வடிவமைப்பதாலும், சேர்க்கை உற்பத்தி தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்துவதாலும், நவீன பரிசோதனை வசதிகளை குறைந்த செலவில் பெறுவதாலும், உலகத்தரம் வாய்ந்த புதிய கண்டுபிடிப்புகளை மிக குறைந்த உற்பத்தி செலவில் எவ்வித மூலதனமும் இன்றி உருவாக்கிட முடியும்.

இத்தகைய சிறப்பம்சங்களை கொண்ட உயர் தொழில்நுட்ப பிரிசிஷன் இன்ஜினியரிங் தொழில்நுட்ப மையத்தை (பொது வசதி மையம்) அரசு மானியத்துடன் உருவாக்கி, அவ்வசதிகளை தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் திறந்து வைத்தார்.

இவ்விழாவில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறைஅமைச்சர்திரு.தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந்தகை, எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் அதுல் ஆனந்த், சிட்கோ முதன்மைச்செயலாளர்/தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆ.கார்த்திக், காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3 லட்சம் மதிப்பு புகையிலை மற்றும் குட்கா பொருட்கள் கடத்தியவர் கைது

விழுப்புரம் நவ 24

விழுப்புரம் மாவட்டம் கோட்டகுப்பம்காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட கோட்டகுப்பம் ரவுண்டானா அருகில் காவல்

ஆய்வாளர் விஸ்வநாதன் மற்றும் போலீசார், வாகன சோதனை செய்து கொண்டிருந்தபோது அவ்வழியாக வந்த KA 05 NH 4586 (Maruti Breeza) என்ற நான்கு சக்கர வாகனத்தை (Car) நிறுத்த கூறிய போது மேற்படி வாகனம் நிற்காமல் சென்றது. இதை




எடுத்து வாகனத்தை போலீசார் பின் தொடர்ந்து சென்று சுற்றி வளைத்து மடக்கி பிடித்து வாகனத்தில் சோதனை செய்தபோது அதில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா பொருள்கள் இருந்தது தெரியவந்தது.

வாகனத்தில் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த வந்த ஆசாராம் த/பெ தேவாரம் என்பவரை கைது செய்து அவரிடமிருந்து 3 லட்சம் மதிப்புள்ள ஹான்ஸ் 12,000 பாக்கெ ட்டுகள்வி மல் பாக்கு 12,000 பாக்கெட்டுகள் Vi tobacco 12,000 பக்கெட்டுகள்மொ த்தம் 36,000 பாக்கெட்டுகள் 274 கிலோ எடை கொண்ட புகையிலை மற்றும் குட்கா பொருட்கள் கைப்பற்றப்பட்டு எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது

## நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்த முகாம்

நாசரேத், நவ.24

நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்த முகாம் நடைபெற்றது. முகாமினை, பள்ளியின் தலைமை ஆசிரியர் குணசீலராஜ் துவக்கி வைத்தார். நாசரேத் கிராம நிர்வாக அலுவலர் சிவராமன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். ஒவ்வொரு வாக்கும் முக்கியமானது, எந்த ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது என்ற கருத்துக்களின் அடிப்படையில் முகாம் நடைபெற்றது. 18 வயது பூர்த்தி அடைந்தவர்களுக்கான புதிய வாக்காளர் பெயர் பதிவு செய்தல், வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண் இணைத்தல், நடப்பு வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளை திருத்தம் செய்தல் போன்றவற்றிற்கான படிவங்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டன.



முகாமில், வாக்காளர் பதிவு அலுவலர்கள் பராசக்தி, காசி மயில் மற்றும் நேசராணி ஆகியோர் கலந்து கொண்டு வாக்காளர்களுக்கு பல்வேறு படிவங்களை வழங்கி பூர்த்தி செய்த படிவங்களைப் பெற்றுக் கொண்டனர். முகாமிற்கு வந்திருந்தவர்களுக்கு, வாக்காளர் உதவிமையச் செயலி குறித்தும், வாக்காளர் உதவிமைய சேவை எண் 1950 குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது. நிகழ்ச்சியில், தேசிய மாணவர் படை அலுவலர் சுஜித் செல்வசுந்தர், இயற்பியல் ஆசிரியர் ஜெர்சோம் ஜெபராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தாளாளர் சுதாகர் தலைமையில் வாக்காளர் மைய பொறுப்பாளர் தனபால், பிற ஆசிரியர்கள், ஆசிரியைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

தினகனி



# சென்னையில் 2 நாட்கள் கனமழை பெய்ய வாய்ப்பு வானிலை ஆய்வு மையம்



சென்னை, நவ.24

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் வரும் 25ந்தேதி 4 மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூரில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளது. கடலூர், அரியலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் வரும் 26ந்தேதி 6 மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கு வாய்ப்புள்ளது. காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் 27ந்தேதி 5 மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி மற்றும் காரைக்காலில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் நாளை மறுநாள் முதல் 29ந்தேதி வரை மிக கனமழைக்கு வாய்ப்புள்ளது. சென்னையில் வரும் 27 மற்றும் 28ந்தேதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பிரசவத்தின்போது தாய்மார்களின் இறப்பு விகிதம் அதிகரிப்பா? தமிழக அரசு விளக்கம்






சென்னை, நவ.24

கடந்த 20 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பிரசவத்தின்போது தாய்மார்களின் இறப்பு விகிதம் அதிகரித்துள்ளதாகவும், அரசு ஆஸ்பத்திரிகளில் இதுவரை இல்லாத அளவுக்கு டாக்டர்கள் பணியிடம் காலியாக இருப்பதாகவும் சமூக வலைத்தளங்களில் ஒரு தகவல் வேகமாக பரவி வருகிறது. இதனை தமிழக அரசு மறுத்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், "கடந்த 2001ம் ஆண்டில் தமிழ்நாட்டில் பிரசவத்தின்போது ஒரு லட்சம் பேரில் 134 ஆக இருந்த தாய்மார்களின் இறப்பு விகிதம் கடந்த 201820ல் 54 ஆக குறைந்தது.

தற்போது 202324ல் இது 45.5 ஆக மேலும் குறைந்திருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் தாய்மார்களின் இறப்பு விகிதம் அதிகரித்துள்ளதாக பொய்யான தகவல் பரப்பப்படுகிறது'' என்று கூறப்பட்டுள்ளது.

# திருச்சி, நாகை, சிதம்பரம், கடலூர் மாவட்டங்களில் துணை முதலமைச்சர் 3 நாள் சுற்றுப்பயணம்



திருச்சி, நவ.24

திருச்சி, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தமிழக துணை முதலமைச்சரும் தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் இன்று திருச்சி வருகிறார்.

சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி வந்தடையும் அவர் மாலை 4 மணிக்கு கார் மூலமாக துறையூர் புறப்பட்டு செல்கிறார்.

பின்னர் மாலை 5.30 மணிக்கு துறையூர் ஆஸ்பத்திரி சாலை ரத்னா காம்ப்ளக்ஸில் தி.மு.க. இளைஞரணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தை திறந்து வைக்கிறார்.

மாலை 5.45 மணிக்கு துறையூர் திருச்சி சாலையில் அமைக்கப்பட்டுள்ள பெரம்பலூர் எம்.பி., கே.என்.அருண்நேருவின் அலுவலகத்தை திறக்கிறார்.

மாலை 6 மணிக்கு துறையூர் பஸ் நிலையம் பகுதியில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ள கலைஞரின் முழு உருவ வெண்கல சிலையை திறந்து வைக்கிறார்.

பின்னர் துறையூர் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று இரவு நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி செல்கிறார்.

இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு நாகப்பட்டினம் வி.பி.என். திருமண மண்டபத்தில் நடைபெறும் மீனவர் அணி துணை செயலாளர் அக்கரைப்பேட்டை மனோகரன் இல்ல திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

அதன்பின்னர் காலை 11 மணிக்கு நாகப்பட்டினம் அவுரி திடலில் உள்ள கலைஞர் அரங்கில் மாவட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

மதியம் 12 மணிக்கு நாகப்பட்டினம் ஏ.எஸ்.ஏ. திருமண மஹாலில் திமுக சார்பு அணி நிர்வாகிகளை சந்தித்து பேசுகிறார்.

அதன் பின்னர் பிற்பகல் 3 மணிக்கு மயிலாடுதுறை சிக்னேச்சர் திருமண மண்டபத்தில் சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் இல்ல திருமணவரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்.

இந்த நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு நாளை மறுநாள் (திங்கட்கிழமை) கடலூர் மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். முதல் நிகழ்ச்சியாக கடலூர் புனித வளனார் மேல்நிலைப் பள்ளி கம்மியம்பேட்டையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்குகிறார். காலை 11:15 மணிக்கு கடலூர் துறைமுகம் சங்கரன் சாலையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தை திறந்துவைக்கிறார்.

அதன் தொடர்ச்சியாக காலை 11.45 மணிக்கு கடலூர் துறைமுகம் எம்.எம்.எம். திருமண மண்டபத்தில் தி.மு.க. சார்பு அணி நிர்வாகிகளை சந்தித்து உரையாற்றுகிறார். மதியம் 1 மணிக்கு கடலூர் அண்ணா நகர் சி.கே. பள்ளி வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் வழங்குகிறார் பின்னர் மாலை 4:30 மணிக்கு கடலூர் கலெக்டர் அலுவலகத்தில் அரசுத்துறை ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்கிறார் கலந்து கொள்கிறார்.

# முதியவரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட மகளிர் உரிமை தொகை பணத்தை மீட்டு தர பெண் கோரிக்கை



திண்டுக்கல், நவ.24

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அருகே உள்ள ரெட்டியபட்டி, காஞ்சி பெரியவர் நகரை சேர்ந்தவர் முத்துப்பாண்டி (வயது 43). முறுக்கு வியாபாரி. இவரது மனைவி முருகேஸ்வரி (40). இந்த தம்பதிக்கு கண்ணன், மகேஸ்வரன் என்ற 2 மகன்கள் உள்ளனர்.

இந்தநிலையில் முருகேஸ்வரி கடந்த ஆண்டு தமிழக அரசின் மகளிர் உரிமை தொகை பெறுவதற்கு விண்ணப்பித்து இருந்தார். தொடர்ந்து அரசு தரப்பில் இருந்து முருகேஸ்வரியின் செல்போன் எண்ணுக்கு உங்களுடைய மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது. நீங்கள் மகளிர் உரிமைத்தொகைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள் என்று குறுஞ்செய்தி வந்துள்ளது.

இதற்கிடையே முருகேஸ்வரி தனது விண்ணப்பத்தில் வடமதுரையில் உள்ள ஒரு தேசிய மயமாக்கப்பட்ட தனது வங்கி கணக்கு எண்ணை குறிப்பிட்டிருந்தார். ஆனால் முருகேஸ்வரி வங்கிக் கணக்கின் கடைசி எண்ணை தவறாக பதிவேற்றம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனால் கடந்த 14 மாதங்களாக அதே வங்கியில் கணக்கு வைத்துள்ள காணப்பாடியைச் சேர்ந்த 60 வயது முதியவருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் முருகேஸ்வரியின் செல்போன் எண்ணுக்கு பணம் வரவு வைக்கப்பட்டதாக குறுந்தகவல் மட்டும் வந்துள்ளது.

பின்னர் அந்த முதியவர் முதல் 3 மாதங்கள் மட்டும் வங்கியில் இருந்து பணத்தை எடுத்து முருகேஸ்வரியிடம் கொடுத்தார். அதன்பின்னர் அவர் பணத்தை தரவில்லை. இதுகுறித்து அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனி கவனம் செலுத்தி மகளிர் உரிமை தொகை பணத்தை மீட்டு தருமாறு முருகேஸ்வரி கோரிக்கை விடுத்துள்ளார்.

# மாமல்லபுரத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் திடீர் ஆய்வு: பூங்காவை பராமரிக்க அறிவுறுத்தல்



மாமல்லபுரம், நவ.24

மாமல்லபுரம் கிழக்கு கடற்கரை சாலையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதி செயல்பட்டு வருகிறது. இந்த விடுதிக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் திடீர் ஆய்வு செய்தார்.

அப்போது பயணிகள் தங்கும் அறைகள், நீச்சல் குளம், கழிப்பறைகள், கட்டிடங்கள், சமையல் கூடம் மற்றும் வளாகத்தில் உள்ள செம்மொழி சிற்ப பூங்கா ஆகியவற்றை பார்வையிட்டார். பூங்காவை பராமரித்து பிரபலமாக்க அறிவுறுத்தினார்.


பின்னர், மாமல்லபுரத்தில் பழைய சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதி, பேருந்துநிலையம் அருகே மரகத பூங்காவில், ரூ.8 கோடி மதிப்பீட்டில் 10 லட்சம் விளக்குகள் மூலம் ஒளிரும் தோட்டம் அமைக்கும் பணி மற்றும் 5 கோடி மதிப்பீட்டில் தலசயன பெருமாள் கோயில் வளாகத்தில் 3டி அனிமேஷன் திட்டப்பணிகளை பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

முன்னதாக, திருவிடந்தையில் நித்தியகல்யாண பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் 223 ஏக்கரில் "ஆன்மீக கலாச்சார பூங்கா" அமைய உள்ள இடத்தையும் ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, சுற்றுலா வளர்ச்சிக் கழக இயக்குனர் ஷில்பா பிரபாகர் சதீஷ், செங்கல்பட்டு கலெக்டர் அருண்ராஜ், சப் கலெக்டர் நாராயணசர்மா, மாமல்லபுரம் சுற்றுலா அலுவலர் சக்திவேல், சுற்றுலா வளர்ச்சி கழக மண்டல மேலாளர் வெங்கடேசன், காஞ்சிபுரம் திமுக மாவட்ட பொருளாளர் விசுவநாதன், பேரூராட்சி கவுன்சிலர் மோகன்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# விஜயிடம் பிச்சை எடுத்து பார்த்தாச்சி... ரஜினி சார் வீட்டில் போய் பிச்சை எடுக்கலாம்னு போய்ட்டிங்களா Mr. சீமான்: விஜயலட்சுமி விமர்சனம்





சென்னை, நவ.24

நடிகர் ரஜினிகாந்த்இன் அரசியல் வருகைக்கு நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தார். மேலும், நடிகர் ரஜினிகாந்த் குறித்தும் கடும் விமர்சனங்களை முன் வைத்தார். அரசியல் கட்சியை அறிவித்த ரஜினிகாந்த் அதன்பிறகு அரசியலில் இருந்து விலகுவதாக கூறி அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தினார்.

இதனிடையேதான் நேற்றுமுன்தினம் சீமான் ரஜினிகாந்த் சந்திப்பு நடந்தேறியது. இந்த சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வரும்நிலையில், நடிகை விஜயலட்சுமி பேசிய வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அதில் அவர் பேசியிருப்பதாவது:

விஜய் வீட்டில் பிச்சை எடுத்து பார்த்தாச்சி. அது எதுவும் வேலைக்கு ஆகாது என்றதும் அடுத்ததா போயஸ்கார்டனில் ரஜினி சார் வீட்டில் போய் பிச்சை எடுக்கலாம்னு போய்ட்டிங்களா Mr. சீமான்.

விஜய் அண்ணா கிட்ட இருந்து தப்பிக்கிறதுக்கு வேற எந்த வழியும் கிடைக்கலையா. ரஜினி சார் யாருனு ஞாபகம் இருக்கா. அவங்க அரசியலுக்கு வரன்னு சொன்ன உடனே உங்க வாய் தான் சொல்லிச்சு. அவர் கன்னடாக்காரர்... அவர் மேல உப்பு, மிளகாய் தூள் எல்லாம் போட்டு வறுத்து எடுத்துட்டுப் பார்க்கணும்னு நான் விருப்பப்படுறேன்னு அப்படின்னு மேடைமேடையா அவரை கொச்சைப்படுத்துனீங்களே... அத மறந்துட்டா போய் நேற்று (வியாழக்கிழமை) அவர் வீட்டில் பிச்சை எடுத்துட்டு நின்னுக்கிட்டு இருந்தீங்க.. அசிங்கமா இல்ல..

விஜய் அண்ணாக்கிட்ட இருந்து தப்பிக்கணும்னு ரஜினி சார் கால்ல விழுறீங்க...

உங்கள் மேல நான் வந்து வழக்கு தொடுத்தா திமுக கால்ல போய் விழுறீங்க... உங்கள யாரும் நம்ப மாட்டாங்க Mr. சீமான். தமிழ்நாட்டு மக்கள் கிட்ட சொல்றேன். ... யாரும் சீமானை நம்பாதீங்க...

இவ்வாறு அந்த வீடியோவில் விஜயலட்சுமி பேசி உள்ளார்.

# மின்சார ரெயில்கள் ரத்து: தாம்பரத்தில் இருந்து செங்கல்பட்டிற்கு சிறப்பு பஸ்கள்

சென்னை, நவ.24

பராமரிப்புகள் பணிகள் காரணமாக சென்னை கடற்கரைசெங்கல்பட்டு மார்க்கத்தில் 28 மின்சார ரெயில்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன. அதிகாலையில் இருந்து சேவை ரத்து செய்யப்பட்டாலும் அதனை ஈடு செய்வதற்காக புதிய கால அட்டவணை வெளியிடப் பட்டுள்ளது.

காலை மற்றும் மாலை பீக் அவர்சில் பொதுமக்கள் பாதிக்காத வகையில் ரெயில்கள் நேரம் மாற்றி அமைக்கப்பட்டு இயக்கப்பட்டுகின்றன.

சென்னை மாநகரத்தோடு புறநகர் பகுதியை இணைக்கும் பாலமாக விளங்கும் மின்சார ரெயில்களில் தினமும் லட்சக்கணக்கானவர்கள் பயணம் செய்கிறார்கள்.

அரசு, தனியார் அலுவகங்களில் பணிபுரிவோர் நீண்ட தூரத்தில் இருந்து வருவதற்கு மின்சார ரெயில் சேவை மிகவும் பயன் உள்ளதாக இருப்பதால் பராமரிப்பு பணிக்காக ரத்துசெய்யும் போது சிரமங்கள் ஏற்படுகின்றன.

தொடங்கி உள்ள பராமரிப்பு பணிகள் நாள் குறிப்பிடாமல் நடைபெறுவதால் கடற்கரைசெங்கல்பட்டு மார்க்கத்தில் புதிய அட்டவணை தயாரிக்கப்பட்டு அதன்படி ரெயில்கள் இயக்கப்பட்டன.

பொதுமக்களுக்கு பாதிப்பில்லாத வகயில் 200க்கும் மேற்பட்ட ரெயில் சேவை இந்த மார்க்கத்தில் இயக்கப்படுவதாகவும் குறிப்பாக நெரிசல் மிகுந்த வேளையில் சேவை குறைக்கப்படாமல் இயக்கப்படுகிறது என்று ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனாலும் மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் கூடுதலாக சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. தாம்பரத்தில் இருந்து செங்கல்பட்டுக்கு 10 பஸ்களும், பாரிமுனைக்கும் பஸ்களும் இயக்கப்பட்டன. ஏற்கனவே கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திற்கு போதுமான பஸ்கள் இயக்கப்பட்டு வரும் நிலையில் பயணிகளின் தேவை அறிந்து பஸ்கள் அதிகரிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மின்சார ரெயில் ரத்தால் தாம்பரம், எழும்பூர், பூங்கா நகர், கோட்டை ரெயில் நிலையங்களில் சிறிது கூட்டம் காணப்பட்டது. பெரிய அளவில் பாதிப்பு இல்லை. கடற்கரை ரெயில் நிலையத்தில் 5 ரெயில்கள் சிங்கப்பெருமாள் கோவில் வரை இயக்கப்படும் என்று அறிவிப்பு பலகையும் வைக்கப்பட்டிருந்தது.

மெட்ரோ ரெயிலை பொறுத்தவரையில் பீக் அவர்சில் அதிகபட்க அளவில் ரெயில்கள் இயக்கப்பட்டன. இன்னும் தேவைப்பட்டால் இயக்கவும் தயாராக இருப்பதாக மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# ஓடும் அரசு பஸ்சில் இருக்கை உடைந்து சாலையில் விழுந்த பெண்



சிதம்பரம், நவ.25

கடலூர் மாவட்டம் சாமியார்பேட்டையில் இருந்து காலை பயணிகளை ஏற்றிக்கொண்டு சிதம்பரம் நோக்கி அரசு பஸ் ஒன்று புறப்பட்டது.

குமராட்சியை சேர்ந்த ஹரிதரன் (வயது 60) என்பவர் பஸ்சை ஓட்டினார். சிதம்பரம் அருகே வேலக்குடியை சேர்ந்த அருள்மணி என்பவர் கண்டக்டர் பணியில் இருந்தார்.

இந்த பஸ் புதுக்குப்பம் கிராமத்தில் உள்ள நிறுத்தத்திற்கு காலை 7.30 மணி அளவில் வந்தபோது, அதே கிராமத்தை சேர்ந்த சந்திரன் மனைவி தையல் நாயகி (52) என்பவர் பஸ்சில் ஏறி, பின்பக்க இருக்கையில் அமர்ந்துள்ளார். பின்னர் பஸ் புறப்பட்டு, புதுப்பேட்டை அருகில் சென்று கொண்டிருந்த போது, திடீரென தையல்நாயகி அமர்ந்திருந்த இருக்கை உடைந்து விழுந்தது.

இதில் நிலை தடுமாறிய தையல்நாயகி பஸ்சின் பின்பக்க படிக்கட்டு வழியாக சாலையில் விழுந்தார். இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த சக பயணிகள் கூச்சலிட்டனர். இந்த சத்தம் கேட்டு உடனே, ஹரிதரன் பஸ்சை நிறுத்தினார். விபத்தில் தையல் நாயகியின் இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. பின்னர், பயணிகள் உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக சிதம்பரம் ராஜா முத்தையா அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர், மேல்சிகிச்சைக்காக புதுச்சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மேலப்பாளையத்தில் தியேட்டர் மீது பெட்ரோல் குண்டு வீசிய 2 வாலிபர்கள் கைது

நெல்லை, நவ.24

நெல்லை மேலப்பாளையம் அலங்கார் தியேட்டரில் அமரன் திரைப்படம் இரவு காட்சிகளாக வெளியிடப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த 16ந் தேதி அதிகாலை 3 மணி அளவில் மர்மநபர்கள் 2 பேர் அந்த தியேட்டர் வளாகத்தில் பெட்ரோல் குண்டுகளை வீசிவிட்டு தப்பிச்சென்றுவிட்டனர். இதுகுறித்து மேலப்பாளையம் குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் மாரியப்பன் வழக்குப்பதிவு செய்து சி.சி.டி.வி. கேமராவில் பதிவான 2 நபர்களின் உருவங்களை வைத்து விசாரணை நடத்தி தேடி வந்தனர்.

மேலும் தென்மண்டல தீவிரவாத தடுப்பு பிரிவு போலீசாரும் அதன் போலீஸ் சூப்பிரண்டு ராஜேஷ் குமார் தலைமையில் விசாரணையை தொடங்கினர்.

மேலப்பாளையம் போலீசார் மற்றும் தீவிரவாத தடுப்பு பிரிவு போலீசாரின் புலன் விசாரணை வளையத்தில் 10க்கும் மேற்பட்டவர்கள் கொண்டு வரப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர். இந்நிலையில் குண்டு வீச்சு சம்பவத்தில் ஈடுபட்ட வர்களில் ஒருவரை போலீசார் நேற்று முன்தினம் கண்டு பிடித்தனர். அவர் மேலப்பாளையம் பஷீரப்பா தெருவை சேர்ந்த முகமது யூசுப் ரசின் என்பது தெரியவந்து. அவரை கைது செய்தனர்.

தொடர்ந்து நடத்திய விசாரணையில் அவருடன் சேர்ந்து பெட்ரோல் குண்டுகளை வீசியது மேலப்பாளையம் ஆசிரான் மேலத் தெருவை சேர்ந்த செய்யது முகமது புகாரி(29) என்பது தெரியவந்தது. அவரை தீவிரவாத தடுப்பு பிரிவு போலீசார் கைது செய்தனர். பின்னர் 2 பேரும் நேற்று நெல்லை கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு இரவோடு இரவாக சிறையில் அடைக்கப்பட்டனர். இதனிடையே, அவர்களிடம் பெட்ரோல் குண்டுகளை வீசியது குறித்து விசாரித்தபோது அமரன் திரைப்படம் இஸ்லாமியர்களுக்கு எதிராக காட்சிகள் இருப்பதால் அதற்கு ஏதாவது ஒன்று செய்ய வேண்டும் என்பதற்காக இவ்வாறு ஈடுபட்டதாக தெரிவித்ததாக போலீசார் கூறினர். இந்த சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் தயார் நிலையில் இருந்த வாலிபர் இவர்கள் 2 பேரின் கூட்டாளி என்பதும், அவரும் மேலப்பாளையத்தில் தான் பதுங்கி இருக்கிறார் என்பதும் போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது. அந்த வாலிபரை பிடிக்க போலீசார் தீவிரம் காட்டி வருகின்றனர்.

# திருச்சி மறுவாழ்வு மையத்தில் பராமரிக்கப்படும் யானைகள்



திருச்சி, நவ.24

திருச்செந்தூர் முருகன் கோவிலில் கோவில் யானை தெய்வானை தாக்கியதில் பாகன் உள்பட 2 பேர்பலியான சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இது கோவில் யானைகளை பராமரிப்பவர்கள், தனியார் யானை பராமரிப்பாளர்கள் மற்றும் பொதுமக்களையும் அதிர்ச்சி அடைய செய்தது.

இதுபோன்ற துயர சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கோவில் யானை மற்றும் தனியார் யானைபராமரிப்புகளுக்கு தமிழக அரசின் வனத்துறை வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்துள்ளது.

அதனை பின்பற்றாதது விபரீதங்களுக்கு காரணமாகஅமைகிறது. கோவில் யானைகள் மற்றும் 24 மணி நேரமும் கட்டிப் போடப்படும் தனியார் யானைகளுக்கு புத்துணர்வுஅளிக்கவேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

திருச்சி அருகே எம்.ஆர். பாளையத்தில் யானைகள் மறுவாழ்வு மையம் அமைந்துள்ளது. 50 ஏக்கர் பரப்பளவில் விசாலமாக அமைந்துள்ள இந்த மையத்தில் உள்ள யானைகள் தினமும் உற்சாக குளியல், நடைப்பயிற்சி என குதூகலமாக இருக்கின்றன. வனச்சரக அலுவலர் வி பி சுப்பிரமணியம் தலைமையிலான வனவர் மற்றும் வனக்காப்பாளர்கள் மேற்பார்வையில் இந்த யானைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

கோவில்கள் மற்றும் தனியார்வசம் இருந்து மீட்கப்படும் யானைகளுக்கு இங்கு புத்துணர்வு அளிக்கப்படுகிறது. தினமும் யானைகளுக்கு காலை 6 மணிக்கு யானைகள் எழுந்தவுடன் 8 முதல் 12 கிலோ மீட்டர் தூரம் வரை நடைபயிற்சி அளிக்கப்படுகிறது. பின்னர் சிறிய குளியல் போடுகிறது.

அதன் பின்னர் கால் நகத்துக்குஇடையில்வியர்வை சுரப்பி இருப்பதால் புட்கேர் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதில் வேப்ப எண்ணெய், கட்டி கற்பூரம், பூண்டு உள்ளிட்டவை கலந்து காய்ச்சி டெக்காமலி ஆயில் போட்டு தடவி விடுகிறார்கள். இதன் மூலம் கிருமிகள் அதனை அண்டாமல் பாதுகாக்கிறார்கள். அதன் பின்னர் காலை 9 மணிக்கு திட உணவு அளிக்கப்படுகிறது. அதன் பின்னர் மண் குளியல் குளியல், நடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவ்வப்போது சோளத்தட்டை மர இலை போன்ற தீவனங்கள் வழங்கப்படுகிறது.

இவ்வாறு நாள் முழுவதும் யானைகள் புத்துணர்வுடன் பராமரிக்கிறார்கள். இது தொடர்பாக வனச்சரக அலுவலர் வி பி சுப்பிரமணியம் கூறியதாவது:

தற்போது எம்.ஆர். பாளையம் யானைகள் மறுவாழ்வு மையத்தில் 10 யானைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்கு 11 யானைகள் இருந்தன. அதில் ஒரு யானை சமீபத்தில் உடல் நலக்குறைவால் இறந்துவிட்டது. அதனை காப்பாற்ற பல கட்ட முயற்சிகள் எடுத்தோம். பலனளிக்கவில்லை.

வனத்துறை சார்பில் 7 பேர் இங்கு பணியாற்றி வருகிறோம். ஒவ்வொரு யானையையும் பராமரிக்க மாவூத், காவடி என 2 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். காட்டுக்குள் இருப்பது போன்று யானைகள் இங்கு சுதந்திரமாக சுற்றித் திரிகின்றன. பொதுவாகவே வனத்துறை சார்பில் கோவில் மற்றும் தனியார் யானைகளுக்கு விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதில் யானைகளை வேறு நபர்கள் தொடுவது ,உணவு கொடுப்பது, ஆசீர்வாதம் வாங்குவது போன்றவை கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கோவில் யானை பராமரிப்பாளர்கள் மற்றும் தனியார் யானை பாகன்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும் இந்த விதிமுறைகளை பின்பற்றினால் அசம்பாவிதங்களை தடுக்கலாம் .

இவ்வாறு அவர் கூறினார்.

# துரைப்பாக்கத்தில் சதுப்பு நிலத்தில் ஆக்கிரமித்து கட்டிய 47 வீடுகள் இடிப்பு



சோழிங்கநல்லூர், நவ.24

துரைப்பாக்கம் அடுத்த மேட்டுக்குப்பம், வி.பி.ஜி. அவென்யூ மகாலட்சுமி நகர்பகுதியில் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை ஆக்கிரமித்து வீடுகள், கட்டிடங்கள் கட்டப்பட்டு உள்ளன.

இதனை அகற்ற வனத்துறையினர் முடிவு செய்தபோது ஆக்கிரமிப்பாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இது தொடர்பாக ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.இதனை விசாரித்த நீதிபதி நீர்நிலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட்டார். இதையடுத்து சதுப்பு நில பகுதியில் ஆக்கிரமித்து கட்டி இருந்த 47 வீடுகளை அகற்ற நோட்டீசு வழங்கப்பட்டது. ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் வீடுகளை அகற்றாமல் இருந்தனர்.

இந்த நிலையில் இன்று காலை வருவாய்த்துறை அதிகாரிகள் ஆக்கிரமிப்பு வீடுகளை இடித்து அகற்ற ஜே.சி.பி. எந்திரத்துடன் வந்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் சுமார் 50க்கும் மேற்பட்டோர் அதிகாரிகளுடன் கடும் வாக்குவாதம் செய்தனர்.

மேலும் வீடுகளை இடிக்க விடாமல் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்களிடம் துரைப்பாக்கம் போலீசார் மற்றும் அதிகாரிகள் சமாதான பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் அவர்கள் போராட்டத்தை கைவிட மறுத்து தொடர்ந்தனர். இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட பத்மா, பன்னீர்செல்வம், ராஜா உள்ளிட்ட 8 பேரை போலீசார் கைது செய்தனர்.

வீடுகள் இடிக்கப்படுவதை கண்டதும் லட்சுமி என்பவர் மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை மீட்டு அருகில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். கைதான அனைவரும் அருகில் உள்ள திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

பின்னர் சதுப்பு நிலத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டு இருந்த 47 வீடுகளும் இடித்து அகற்றப்பட்டது. சுமார் 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டு இருந்தனர். இதனால் அப்பகுதி பரபரப்பாக காணப்பட்டது.

# பேராவூரணி அருகே லாரியில் கடத்தி வரப்பட்ட 300 கிலோ கஞ்சா பறிமுதல் 3 பேர் கைது



பேராவூரணி, நவ.24

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி அருகே லாரியில் கஞ்சா கடத்தப்படுவதாக தஞ்சை சிறப்பு போலீஸ் படைக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன் பேரில், போலீசார் பேராவூரணி முடச்சிக்காடு கலைஞர் நகர் பகுதியில் இன்று அதிகாலை தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது பேராவூரணி ஊமத்தநாடு சாலையில் பணியில் ஈடுபட்ட போது, அவ்வழியாக வந்த லாரியை மறித்து சோதனை செய்தனர். அப்போது லாரியில் கஞ்சா பொட்டலங்கள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது. கடத்தி வரப்பட்ட கஞ்சாவின் மொத்த எடை 300 கிலோ ஆகும்.

தொடர்ந்து, போலீசார் கஞ்சாவையும், கடத்தலுக்கு பயன்படுத்தியதாக கூறி ஒரு காரையும் பறிமுதல் செய்தனர். மேலும், கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட காரங்குடா பகுதியை சேர்ந்த அண்ணாத்துரை (வயது 44), தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பகுதியை சேர்ந்த தர்மராஜ் (34), அம்மணிச்சத்திரம் பகுதியை சேர்ந்த முத்தையா (60) ஆகியோரை கைது செய்தனர்.

அவர்களிடம் இதுகுறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். லாரியில் கஞ்சா கடத்தி வரப்பட்ட சம்பவம் பேராவூரணி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# கடலூரில் கடல் சீற்றம் படகுகளை பாதுகாப்பாக நிறுத்திய மீனவர்கள்



கடலூர், நவ.24

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. கேரளகடலோரப் பகுதிகளை ஒட்டிய தென் கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகக்கூடும்.

நவம்பர் 25ந்தேதி முதல் பருவமழை வலுவடையும். 26 மற்றும் 27ந் தேதிகளில் ஒருசில இடங்களில் மிககனமழைக்கு வாய்ப்புகள் உள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கடலூர் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கன மழை பெய்து வந்த நிலையில் , கடலில் வழக்கத்தை விட சீற்றம் அதிகமாக காணப்படும் என்பதால் நேற்று முதல் மீனவர்கள் மீன் பிடிக்க செல்லக் கூடாது என மீன்வளத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இதனால் கடலூர் மாவட்டத்தில் இருந்து மீனவர்கள் மீன் பிடிக்க செல்லவில்லை. தற்போது கடலில் வழக்கத்தை விட கடல் சீற்றமாக காணப்பட்டு வருகின்றது. மேலும் கடலூர் தாழங்குடா பகுதியில் கடல் சீற்றம் காரணமாக முன்னோக்கி கடல் அலை சுமார் 50 அடிக்கு வந்து செல்வதால் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி உள்ளனர். இது மட்டுமின்றி அதிகளவில் கடல் சீற்றம் ஏற்பட்டால் படகுகள் இழுத்துச் செல்லப்பட்டு விடும் என்ற அச்சத்தில் மீனவர்கள் கடற்கரை ஓரமாக பாதுகாப்பாக நிறுத்தி வைத்துள்ளனர்.

# உளுந்தூர்பேட்டை அருகே ஆசிரியர் மீது வழக்கு பதிவு செய்ததால் மாணவர்கள் உள்ளிருப்பு போராட்டம்



உளுந்தூர்பேட்டை, நவ.24

உளுந்தூர்பேட்டை அருகே திருநாவலூர் கெடிலம்அரசினர்மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்2 கணித ஆசிரியர் ஜெய்சங்கர் மீது வழக்கு பதிவு செய்ததால் மாணவர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகேஉள்ளதிருநாவலூர் கெடிலம் ஆற்றுப்பகுதியில் அரசினர் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு கணித ஆசிரியராக ஜெய்சங்கர் பணி ஆற்றி வருகிறார். அவரை அதே பள்ளியில் படிக்கும் 12ம் வகுப்பு சிகுரூப் மாணவன் சேட்டு ஜெய்சங்கரை அசிங்கமாக திட்டியதாக தெரிகிறது. அவர் அந்த மாணவனை அழைத்துக் கொண்டு தலைமை ஆசிரியர் அலுவலகத்தில் ஒப்படைத்தார்.

இந்த நிலையில் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவன் ஆசிரியர் ஜெய்சங்கர் அடித்து விட்டதாக கூறி உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் ஆசிரியர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதேபோல் மாணவர் ஆசிரியரை அசிங்கமாக திட்டி கொலை மிரட்டல் விட்டதாக ஆசிரியர் கொடுத்த புகாரின் பேரில் மாணவர் சேட்டு மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த சம்பவம் அந்தப் பள்ளியில் மாணவர்களுக்கிடையே கிடைத்த தகவலின் பேரில் ஆசிரியர் பள்ளிக்கு வராததால் ஆசிரியர் மீது ஏன் பொய் வழக்கு போட்டீர்கள் என்று மாணவர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த சம்பவம் தகவல் அறிந்த திருநாவலூர்போலீஸ் இன்ஸ்பெக்டர் இளையராஜா, சப் இன்ஸ்பெக்டர் பிரபாகரன், சிறப்பு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர்கள்ஜாபர்அலி, ஜெயா, அஷ்டலட்சுமி தனி பிரிவு போலீசார் செந்தமிழ் செல்வன், சரவணன் மற்றும் 50க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழ்நிலை உருவாகி வருகிறது.

# உடலில் சத்து ஏற்ற ஒரே நேரத்தில் 15 சத்து மாத்திரைகளை சாப்பிட்ட மாணவனுக்கு உடல்நிலை பாதிப்பு

கடலூர், நவ.24

கடலூர் அடுத்த குறிஞ்சிப்பாடி பெரியகண்ணாடி கிராமத்தை சேர்ந்த 12 வயது மாணவன் அதே பகுதியில் உள்ள பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வருகிறார்.

இப்பள்ளியில் வாரந்தோறும் வியாழக்கிழமை சத்து மாத்திரைகள் வழங்கப்படுவது வழக்கம். நேற்று வியாழக்கிழமை காலை பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்படும். சத்து மாத்திரைகள் (போலிக் ஆசிட் இரும்பு சத்து மாத்திரை)அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மாத்திரைகளை சாப்பிடாத மாணவர்கள் தண்ணீர் குடிக்கும் இடத்தில் மாத்திரைகளை வைத்துவிட்டு சென்றதாக கூறப்படுகின்றது.

இந்த நிலையில் தண்ணீர் குடிக்கும் இடத்திற்கு வந்த 8ம் வகுப்பு மாணவன் ஒரே நேரத்தில் அதிக மாத்திரைகள் சாப்பிட்டால் உடம்பில் சத்து அதிகரிக்கும் என எண்ணி அங்கிருந்த 15 மாத்திரைகளை மொத்தமாக ஒரே நேரத்தில் உட்கொண்டு உள்ளார். இதில்மாணவனுக்கு திடீரென வயிற்றுப் போக்கு ஏற்படவே உடனடியாக ஆசிரியரிடம் தகவல்களை தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மாணவனின் பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சனாதனம் வேறு... கடவுள் நம்பிக்கை வேறு திருமாவளவன்

சென்னை, நவ.24

சென்னைவிமானநிலையத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

சனாதனம் வேறு... கடவுள் நம்பிக்கை என்பது வேறு.

கடவுள் நம்பிக்கை, மத நம்பிக்கை இது சாதாரண மக்களுடைய உணர்வுகள். சாதாரண மக்களுடைய உணர்வுகளை மதிக்க வேண்டியது எங்களை போன்றவர்களது கடமை.

தேவாலயத்திற்கு அழைக்கின்றபோது நாங்கள் அங்கு செல்கிறோம். மசூதிகளுக்கு அழைக்கின்றபோது அங்கே செல்கிறோம். இதேபோன்று ஏராளமான தோழர்கள் கோவில்களுக்கு அழைக்கிறார்கள். கோவில்களுக்கும் செல்கிறோம். இது உணர்வுகளை மதிக்கிற ஒரு நிலைப்பாடு அவ்வளவு தான்.

சனாதன எதிர்ப்பு என்பது பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வை நம்புவது. ஆண்கள் மேலானவர்கள். பெண்கள் கீழானவர்கள். வருண அடிப்படையிலே ஒரு குறிப்பிட்ட வர்ணம் மேலானது. மற்ற வர்ணங்கள் கீழானவை என்று போதிக்கின்ற அந்த முறையும் அதை நம்புகின்ற நடவடிக்கைகளும் தான் விமர்சனத்திற்கு உரியவை. அவற்றை தான் நாங்கள் எதிர்க்கிறோம். அதைத்தான் நாங்கள் அம்பலப்படுத்துகிறோம்.

மக்களுடைய உணர்வுகள், நம்பிக்கைகள் அவரவருக்கானது. ஒருபோதும் எங்கள் நம்பிக்கை தான் சரியானது என்று காயப்படுத்தி அதை திணிக்க முயன்றதில்லை.

அதனுடைய ஒரு வெளிப்பாடு தான் பழனிக்கு சென்று இருந்தபோது இயக்க தோழர்கள் விடுத்த அழைப்பை ஏற்று 30 ஆண்டுகளுக்கு பிறகு அந்த மலைக்கு சென்று வந்துஇருக்கிறேன். இதில் எந்த முரண்பாடும் இல்லை என்று நம்புகிறேன் என்று கூறினார்.

# ரேசன் கடைகளில் துவரம் பருப்பு தடையின்றி வழங்க வேண்டும் ராமதாஸ்



சென்னை, நவ.24

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னை மாநகரில் உள்ள பெரும்பான்மையான நியாய விலைக்கடைகளில் நவம்பர் மாதத்திற்கான துவரம் பருப்பு இதுவரை வழங்கப்படவில்லை.

சென்னையில் மட்டுமின்றி சென்னையை சுற்றியுள்ள மாவட்டங்களிலும் நியாய விலைக்கடைகளில் பருப்பு வினியோகிக்கப்படவில்லை. நவம்பர் மாதம் தொடங்கி 22 நாட்கள் ஆகிவிட்ட நிலையில், பல நியாயவிலைக்கடைகளுக்கு வெறும் 200 கிலோ துவரம் பருப்பு மட்டுமே வழங்கப்பட்டதாகவும், பெரும்பாலான கடைகளுக்கு துவரம் பருப்பே வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

கடந்த மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் தமிழ்நாட்டின் பெரும்பான்மையான மாவட்டங்களில்துவரம்பருப்பு, பாமாயில் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. மக்களவைத் தேர்தல் வந்ததால், பருப்பு, பாமாயில் ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய முடியாததால் தான் தாமதம் ஏற்பட்டதாகவும், இனி தாமதம் ஏற்படாது என்றும் அரசுத் தரப்பில் கூறப்பட்டது. ஆனால், இப்போது அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய 3 மாதங்களுக்குத் தேவையான துவரம் பருப்புக்கான கொள்முதல் ஆணைகள் கடந்த செப்டம்பர் மாதமே வழங்கப்பட்டுவிட்டதாக தமிழக அரசே தெரிவித்த பிறகும் கூட நவம்பர் மாதத்தில் பற்றாக்குறை நிலவுவது ஏன்?

வெளிச்சந்தையில் பருப்பு விலை உயருவதற்காகவே தமிழக அரசு திட்டமிட்டு நியாயவிலைக்கடைகளில் பருப்பு வழங்கலை தாமதப்படுத்துகிறதா? என்பது தெரியவில்லை.

ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பசியாறுவதற்கு நியாயவிலைக்கடைகளில் மலிவு விலையில் வழங்கப்படும் பருப்பு மிகவும் முக்கியம் ஆகும். இதை உணர்ந்து கொண்டு அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் நவம்பர் மாதத்திற்கான துவரம் பருப்பு தடையின்றியும், தாமதமின்றியும் வழங்கப்படுவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# "சங்கி" என்றால் "நண்பன்" என்று அர்த்தம் சீமான் புது விளக்கம்



சென்னை, நவ.24

ரஜினிகாந்தை சங்கி என்றும், நாம் தமிழர் கட்சி பாஜகவின் B டீம் என்றும் அழைக்கப்படுவது குறித்து சீமான் கூறியதாவது:

சங்கி என்றால் சக தோழன், நண்பன் என்று அர்த்தம். சங்பரிவாரில் இருந்து சங்கி என்று சொல்கிறார்கள். உண்மையான சங்கி யார் என்றால் எங்களையெல்லாம் சங்கின்னு சொல்றவங்க தான்.

திடீரென்று பிரதமரை காலையில் மகனோ, மாலையில் அப்பாவோ சந்திக்கிறீங்க. எதுக்கு சந்திக்க போனோம்னு சொல்லமாட்டிறீங்க... என்ன சந்திச்சி பேசினோம்னு சொல்லமாட்டிறீங்க. இப்போ நான் ரஜினிகாந்த்தை சந்தித்த போது பேசினதை சொல்றேன். அதை ஏன் சொல்ற மாட்டீறீங்க. அதை ஏன் சொல்ல மாட்டிறீங்க.. அப்போ என்னை வந்து கேட்குறாங்க கள்ள உறவான்னு.. நல்ல உறவே இருக்கு.

பொண்ணு கொடுத்து பொண்ணு எடுத்த சம்மந்திங்கள்மாதிரி பிரதமரும், முதலமைச்சரும் போய் சந்தித்து வர்றீங்க. ஆனா வெளியில வந்து எங்களை சங்கின்னு சொல்றீங்க. இது என்ன கொடுமை . திமுகவை எதிர்த்தாலே சங்கின்னா... அப்போ இத எப்படி சொல்றது ... அப்போ பெருமையா நாங்க சங்கிங்கறத ஏற்கதான் வேண்டும். சங்கின்னா நண்பன் என்று பொருள் இருக்கு என்றார்.

# மீனவர்கள் நலனில் அக்கறை மிகுந்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்: அமைச்சர் ராஜகண்ணப்பன்



கன்னியாகுமரி, நவ.24

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் உலக மீனவ தினவிழா பொதுக்கூட்டம் நடந்தது. பொது கூட்டத்தில் பால்வளத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் மற்றும் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

விழாவில் பால்வளத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பன் பேசியதாவது:

மீனவ மக்களுக்காக ராமநாதபுரத்தில் வரலாற்று சிறப்புமிக்க மீனவர் மாநாடு நடத்தியவர் முதல்வர். சென்னையில் வெள்ளம் வந்த போது ஒரேநாளில்வெள்ளத்தை அகற்றி மின்சாரம் வழங்கியவர்நமது முதல்வரின் ஆட்சி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

மீன்பிடி தடைக்கால நிவாரண நிதியை 5 ஆயிரத்தில் இருந்து 8 ஆயிரமாக உயர்த்தி தந்தவர் முதல்வர் தான். மீனவர் நலனில் எப்போதும் உறுதியாக இருப்பவர் முதல்வர் தான் அதனை செயல்படுத்தியும் காட்டியுள்ளார்.

சாதி மதமின்றி இயங்கும் ஒரு இயக்கமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆனாலும் சரி, திராவிட முன்னேற்ற கழகமானலும் சரி திராவிட கட்சிகள் தான் தமிழகத்தை ஆள வேண்டும் என்று நிர்பந்தம் உள்ளது. முதல்வர் சிறப்பான திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகிறார்.

மீனவர் மீது அக்கறை உள்ளவர்கள் என இந்தியாவில் வேண்டுமானால் காங்கிரஸ் கட்சி என கூறலாம் ஆனால் தமிழகத்தில் தி.மு.க. தான் என்பதனை நீங்கள் உணர வேண்டும். மத்திய அரசோடு இணக்கமாக இருக்க வேண்டும். ஆனால் 1 ரூபாய்க்கு 29 பைசா தரும் மத்திய அரசு நமக்கு வேண்டாம்.

இவ்வாறு அவர் பேசினார்.

மேலும் விழாவில் கலந்து கொண்ட தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை பேசும் போது, 'பா.ஜ.க. கடல் தாமரை மாநாடு நடத்தி மோடி ஆட்சிக்கு வந்தால், மீனவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது,படகுகள்இலங்கை அரசால் சிறை பிடிக்கப்படாது, அதையும் மீறி பிடித்தாலே பாதுகாப்புக்கு இந்திய ராணுவம் வந்து நிற்கும் என்றார்கள்.

ஆனால் 10 ஆண்டுகளாக வாக்குறுதியை காட்டில் பறக்கவிட்டு விட்டார்கள். மீனவர் தினம் கொண்டாடும் இந்நாளில் ஒரு பக்கம் கண்ணீரும் கம்பலையுமாக மீனவர்கள் உள்ளார்கள். மீனவர்கள் தான் பூர்வ குடிகள், மண்ணின் மக்கள்.

மீனவர்களை ஓரளவு தாங்கி பிடிப்பது தமிழகம் தான். ஆனால் இது போதாது அதிக பிரதிநிதித்துவம் வேண்டும். மீனவர்கள் விவகாரத்தில் வெளியுறவுக் கொள்கை தோல்வி அடைந்துள்ளது. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்படுவது தொடர்கிறது' என்றார்.

விழாவில் மேயர் மகேஷ், மீனவர் அணி மாநில செயலாளர் ஜோசப் ஸ்டாலின், பிஷப் நசரேன் சூசை, டன்ஸ்டன், நிக்சன், மற்றும் மகேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவின் இறுதியில் பால்வளத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பனுக்கு வீர வாள் பரிசாக வழங்கப்பட்டது.

# அ.தி.மு.க. கள ஆய்வு கூட்டத்தில் நிர்வாகிகள் மோதல் எஸ்.பி. வேலுமணி முன்னிலையில் கைகலப்பு



நெல்லை, நவ.24

2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை சந்திக்கும் வகையில் அ.தி.மு.க. பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக அனைத்து மாவட்டங்களிலும் கள ஆய்வு கூட்டம் நடத்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் அ.தி.மு.க. சார்பில் பல்வேறு மாவட்டங்களில் கள ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. நெல்லை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் கள ஆய்வு கூட்டம் நெல்லை சந்திப்பு உடையார்பட்டியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைமை நிலைய செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.வேலுமணி எம்.எல்.ஏ., அமைப்பு செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அருணாச்சலம் ஆகியோர் கலந்து கொண்டு கள ஆய்வு கூட்டத்தை நடத்தினர். இதில் நெல்லை மாநகர் மாவட்ட செயலாளர் தச்சை கணேசராஜா மற்றும் மாவட்ட நிர்வாகிகள், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளான எம்.ஜி.ஆர். மன்றம், ஜெயலலிதா பேரவை, இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, அண்ணா தொழிற்சங்கம், வக்கீல் பிரிவு, சிறுபான்மை நலப்பிரிவு, விவசாயப்பிரிவு, மீனவரணி, தகவல் தொழில்நுட்பப்பிரிவு மற்றும் பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் சட்டமன்ற தேர்தலை சந்திப்பது குறித்து பல்வேறு வியூகங்கள் குறித்து நிர்வாகிகள் கருத்து தெரிவித்தனர். அப்போது ஒரு நிர்வாகி பேசும்பொது, கடந்த பாராளுமன்ற தேர்தலில் நெல்லை மாநகர தொகுதிகளில் நாம் தமிழர் கட்சியை விட குறைவான வாக்குகளை பெற்றதாகவும், வாக்காளர் சேர்த்தல், திருத்த முகாம் நடைபெறும்போது அ.தி.மு.க. நிர்வாகிகள் இடம் பெறவில்லை எனவும் பல்வேறு குற்றசாட்டுகளை முன் வைத்து பேசினார்.

கள ஆய்வு கூட்டத்தில் கைகலப்பில் ஈடுபட்டவர்களை முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி எச்சரித்த காட்சி

இதனைக்கேட்ட மாநகர் மாவட்ட செயலாளர் தச்சை கணேசராஜாவின் ஆதரவாளர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷமிட்டனர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பில் ஈடுபட்டனர். சில நிர்வாகிகள் ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டனர்.

இதனைப்பார்த்த எஸ்.பி. வேலுமணி, தகராறு செய்பவர்களுக்கும், கட்டுப்பாடு இல்லாதவர்களுக்கு இங்கு இடமில்லை. தவறு செய்தவர்கள் குறித்து கட்சி விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கும். எனவே அனைவரும் அமைதியாக இருங்கள் என்று கூறினார்.

தொடர்ந்து முன்னாள் எம்.பி. முத்துக்கருப்பனும் நிர்வாகிகளை அமைதிப்படுத்தினார்.

# நாமக்கல் அருகே ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் போராட்டம்



நாமக்கல், நவ.24

நாமக்கல் அடுத்த பொம்மசமுத்திரம் ஊராட்சி பெருமாபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 52 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இப்பள்ளியில் தலைமை ஆசிரியர் இன்றி ஒரு ஆசிரியர் மட்டுமே கடந்த 18 மாதங்களுக்கு மேலாக பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில் அந்த ஆசிரியரும் தற்போது மருத்துவ விடுப்பில் சென்று விட்டார். இதையடுத்து கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு இந்த பள்ளிக்கு தற்காலிகமாக 2 ஆசிரியர்களை நியமித்து தொடக்க கல்வி அலுவலர் உத்தரவிட்டிருந்தார். அதிலும் ஒரு ஆசிரியர் கடந்த 4 நாட்களாக பள்ளிக்கு வரவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் ஆசிரியர்கள் இன்றி மாணவர்கள் தவிப்பதாக கூறி இன்று பள்ளி மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்து பெற்றோருடன் பள்ளியின் நுழைவு வாயில் முன்பு அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள் கூறியதாவது: இந்த பள்ளிக்கு என்று நியமிக்கப்படும் ஆசிரியர்கள் குறைந்தது ஒரு ஆண்டுக்காவது மாற்றப்படாமல் இருக்க வேண்டும். அப்போது தான் மாணவர்களின் கல்வி பாதுகாக்கப்படும். அடிக்கடி ஆசிரியர்கள் மாற்றப்படுவதாலும் நிரந்தரமாக ஆசிரியர் இல்லாததாலும் மாணவர்களின் மனநிலை பாதிப்புக்குள்ளாகிறது. அதோடு மாணவர்களின் பாதுகாப்பும் கேள்விகுறியாக உள்ளது. அதேபோல் பள்ளிக்கென புதிதாக கான்கிரீட் கட்டிடம் கட்டிதர வேண்டும். தற்போது ஓட்டு கட்டிடத்தில் பள்ளி இயங்கி வருவதால் மழை காலங்களில் மாணவர்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது.

மேலும் பள்ளிவளாகத்தை சுற்றிலும் தூய்மை பணிகள் மேற்கொள்ள வேண்டும். மேலும் உடனடியாக தேவையான ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இது பற்றி தெரியவந்ததும் நாமக்கல் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

# நடிகர் சிவகார்த்திகேயனை கிண்டல் செய்ததற்கு மன்னிப்பு கேட்ட ஆர்.ஜே பாலாஜி!



நானும் ரவுடிதான், எல்.கே.ஜி, மூக்குத்தி அம்மன், ரன் பேபி ரன், புகழ், ஜில் ஜங் ஜக், தேவி, சலூன் போன்ற படங்களில் நடித்து பிரபலமடைந்தவர் நடிகர் ஆர்.ஜே.பாலாஜி. ரேடியோ ஜாக்கியாக வாழ்க்கையை தொடங்கிய இவர் தற்போது படங்களில் நடிப்பதோடு கிரிக்கெட் போட்டிகளில் தனக்கே உரித்தான பாணியில் வர்ணனையாளராக இருந்து ரசிகர்களை வியப்பூட்டி வருகிறார். நயன்தாரா நடிப்பில் வெளிவந்த 'மூக்குத்தி அம்மன்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானார். அவரே இயக்கி நடித்த சிங்கப்பூர் சலூன் படம் வெளியாகி கலவையான விமர்சனங்களைப் பெற்றது. தற்போது நடிகர் சூர்யாவின் 45வது படத்தை இயக்குகிறார்.

சொர்கவாசல் எனும் புதிய படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் டீசர் சமீபத்தில் வெளியானது. பா. ரஞ்சித்தின் உதவி இயக்குநர் சித்தார்த் விஸ்வநாத் இந்தப் படத்தை இயக்கியுள்ளார். ஸ்வீப் ரைட் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தின் கதையை இயக்குநர் உடன் தமிழ்ப் பிரபா, அஸ்வின் ரவிச்சந்திரன் இணைந்து எழுதியுள்ளார்கள்.

மத்திய சிறைச்சாலையை மையமாக வைத்து 1999ல் நடக்கும் கதையாக இப்படம் உருவாகியுள்ளது. இதில், செல்வராகவன், கருணாஸ், பாலாஜி சக்திவேல், எழுத்தாளர் சோஷா சக்தி உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

இப்படத்தின் டிரெய்லர் நாளை காலை 11 மணிக்கு வெளியாகும் என அதிகாரபூர்வ அறிவிப்பை படக் குழுவினர் போஸ்டர் ஒன்றை வெளியிட்டு அறிவித்தனர்.

ஆர்.ஜே. பாலாஜி நடித்திருக்கும் சொர்க்கவாசல் திரைப்படமானது வருகின்ற நவம்பர் 29ஆம் தேதி திரைக்கு வர தயாராகி வருகிறது. எனவே இந்த படத்தின் புரோமோஷன் பணிகள் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. சமீபத்தில் நடந்த பேட்டி ஒன்றில் பேசிய ஆர்.ஜி. பாலாஜி சொர்க்கவாசல் படம் குறித்தும் தான் கடந்து வந்த பாதை குறித்தும் பேசியுள்ளார்.

கடந்த சில வருடங்களுக்கு முன்பாக தொலைக்காட்சியில் விருது வழங்கும் நிகழ்ச்சிகளை கலாய்க்கும் ஷோ ஒன்றை தான் செய்ததாகவும் அதில் வேறொரு விருது வழங்கும் நிகழ்ச்சியில் சிவகார்த்திகேயன் எமோஷனலானதை கலாய்த்ததாகவும் கூறினார். மேலும் தான் அந்த ஷோவை செய்யும்போது தனக்காது தவறாக தெரியவில்லை என அந்த நிகழ்ச்சிஒளிபரப்பானபின்னர்தான்தன்தவறைஉணர்ந்ததாகதெரிவித்தஆர்.ஜே.பாலாஜிஅதன்பிறகுசிவகார்த்திகேயனை தொடர்பு கொண்டு மன்னிப்பு கேட்டதாக கூறியுள்ளார். இது தொடர்பான வீடியோவை ரசிகர்கள் பலரும் சமூக வலைதளங்களில் பகிர்ந்து வருகின்றனர்.

# நாக சைதன்யா சோபிதா ஆடம்பரமான திருமணத்தை விரும்பவில்லை நடிகர் நாகார்ஜுனா



தெலுங்கு நடிகர் நாகார்ஜுனாவின் மகனும், நடிகருமான நாக சைதன்யா தெலுங்கில் 'ஏ மாயா சேசாவே, மனம், லவ் ஸ்டோரி, மஜிலி' உள்ளிட்ட பல படங்களில் நடித்துப் பிரபலமானார். இவர் கடந்த 2017ம் ஆண்டு நடிகை சமந்தாவை திருமணம் செய்து கொண்டார். பின்னர் இருவரும் கடந்த 2021ம் ஆண்டு பிரிவதாக அறிவித்து விவாகரத்து பெற்றுகொண்டனர்.

அதன் பிறகு நடிகர் நாக சைதன்யா நடிகை சோபிதா துலிபாலாவை காதலிப்பதாக தகவல் பரவியநிலையில், கடந்த ஆகஸ்ட் மாதம் 8ந் தேதி இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்து முடிந்தது. இது குறித்தான புகைப்படங்களை நடிகர் நாகார்ஜுனா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்திருந்தார்.

நடிகர்நாகார்ஜுனா, விரைவில் நடைபெற உள்ளதனது மகன்நாகசைதன்யா சோபிதாதுலிபாலாவின்திருமணத்திற்காக கார்த்துக்கொண்டிருக்கிறார். மேலும் இந்த திருமணம் குறித்து இவர் சமீபத்தில் கொடுத்த பேட்டியில், திருமணத்திற்கான திட்டம் குறித்து பகிர்ந்து கொண்டார். நாக சைதன்யா மற்றும் சோபிதா இருவரும் ஆடம்பரமான இந்திய திருமணத்தை விரும்பவில்லைஎன்றும்,அனைத்தும்அவர்களின்விருப்பப்படியேதிட்டமிடப்பட்டுவருவதாகநாகர்ஜுனாகூறியுள்ளார்.

"சைதன்யாவும் பிரமாண்ட திருமணத்தை விரும்பவில்லை. அவரும் சோபிதாவும் நெருங்கிய குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்மட்டுமேதிருமணத்தில்கலந்துகொள்வதைவிரும்புகின்றனர்.எனவேஇதற்கானஏற்பாடுகளைஅவர்களிடமே விட்டுவிடுமாறு என்னிடம் கேட்டுக்கொண்டனர். அவர்கள் அதை தங்கள் வழியில் செய்ய விரும்பினர். உண்மையாகவே இந்த வார்த்தை எனக்கு நிம்மதியை கொடுத்தது. தயவுசெய்து செய்யுங்கள் என்று கூறிவிட்டேன். சோபிதாவின் குடும்பத்தினர் திருமணத்திற்கு கொடுக்கும் ஒத்துழைப்பு பற்றி கூறிய நாகர்ஜுனா, என் மகன் திருமணத்தில், பாரம்பரிய திருமண சடங்குகள் மற்றும் புனித மந்திரங்களின் இடம்பெற வேண்டும் என்பதை நான் விரும்பினேன். சோபிதாவின் பெற்றோரும், இது போன்ற முறைகளை சேர்க்க விரும்புவதில் தெளிவாக இருந்தனர். என்னை பொறுத்தவரையில், மந்திரங்களும்சடங்குகளும் மிகவும் இனிமையானவை அவை அமைதியைத்தருகின்றன. இது ஒரு அழகானதிருமணமாக இருக்கும், எளிமையானதாகவும், மனதிற்கு இதமானதாகவும் இருக்கும், இந்த ஜோடியைப் போலவே" என நாகர்ஜுனா கூறியுள்ளார். இந்த ஜோடி டிசம்பர் 4ம் தேதி ஹைதராபாத்தில் உள்ள அன்னபூர்ணா ஸ்டுடியோவில் திருமணம் செய்து கொள்ள உள்ளனர். இதில் நெருங்கிய நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்கும் நிலையில், குடும்பத்தினருக்கு நெருங்கிய பிரபலங்கள் மட்டுமே அழைக்கபட்டுள்ளதாக கூறப்படுகிறது. அண்மையில் பரிசுகளுடன் கூடிய இவர்களின் திருமண பத்திரிக்கை சமூக வலைத்தளங்களில் வைரலானது குறிப்பிடத்தக்கது. தமிழில் 'பொன்னியின் செல்வன்' படத்தில் வானதி கதாபாத்திரத்தில் நடித்து பிரபலமானவர் சோபிதா துலிபாலா. மலையாளம், தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார். 'மங்கி மேன்' என்ற இந்தி படத்திலும் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புரோ கபடி: தமிழ் தலைவாஸ் அணியை வீழ்த்தி உ.பி. யோத்தாஸ் வெற்றி



11வது புரோ கபடி லீக் தொடர் கடந்த அக்டோபர் 18ம் தேதி ஐதராபாத்தில் தொடங்கியது. இந்த தொடரின் லீக் ஆட்டங்கள் ஐதராபாத்தில் நடந்து முடிந்தன. இதையடுத்து தொடரின்2வதுகட்ட லீக் ஆட்டங்கள்நொய்டாவில் நடைபெற்று வருகின்றன.

இதில் இன்று இரவு 8 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் தமிழ் தலைவாஸ் உ.பி. யோத்தாஸ் அணிகள் மோதின. பரபரப்பான இந்த ஆட்டத்தில் உ.பி. யோத்தாஸ் தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடியது. இதனால் உ.பி. யோத்தாஸ் அணி 4024 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

# முதல் டெஸ்ட்; வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிராக வங்காளதேசம் பந்துவீச்சு தேர்வு



வங்காளதேச கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீஸில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இதில் முதலில் டெஸ்ட் தொடரும், அதனை தொடர்ந்து ஒருநாள் மற்றும் டி20 தொடர்களும் நடைபெற உள்ளன. அதன்படி இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி இன்று தொடங்கியது.

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற வங்காளதேச அணியின் கேப்டன் மெஹிதி ஹசன் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி வெஸ்ட் இண்டீஸ் அணி முதலில் பேட்டிங் செய்து வருகிறது.

# சீனா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன்: சாத்விக் சிராக் ஜோடி அரையிறுதிக்கு முன்னேற்றம்



சீனா மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டி ஷென்ஜென் நகரில்நடந்து வருகிறது. இதில் பல முன்னணி வீரர்வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இதில்இன்றுநடைபெற்றஆண்கள்இரட்டையர் பிரிவு காலிறுதி சுற்றில் இந்தியாவின் சாத்விக் சிராக் ஜோடி, டென்மார்க்கின் ஆண்டர்ஸ் ஸ்காரப் மற்றும் கிம் அஸ்ட்ரூப் ஜோடியுடன் மோதியது.

தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடிய சாத்விக் சிராக் ஜோடி 21-16, 21-19 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

# சீனா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன்: 2வது சுற்று ஆட்டத்தில் மாளவிகா பன்சோத் தோல்வி



சீனா மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டி ஷென்ஜென் நகரில் நடந்து வருகிறது. இதில் பல முன்னணி வீரர் வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர் . இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த 2 வது சுற்று ஆட்டத்தில் இந்திய வீராங்கனை மாளவிகா பன்சோத், தாய்லாந்து வீராங்கனை சுபநிதா உடன் மோதினார்

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி சுபநிதா 21 9, 219 என்ற கணக்கில் வெற்றி பெற்றார் தோல்வியடைந்த மாளவிகா பன்சோத் தொடரில் இருந்து வெளியேறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.